அரசாங்கம் ஊக்கமளித்து வருகிறது. ஆனால் வெளிநாட்டுக் காரர்கள் ஆயிரம், ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள சிலைகளை அந்தக் காலத்திலேயே இந்த அளவுக்கு நாகரீகம், பண்பாடு வளர்ந்திருக்கிறதே என்ற ஆர்வத்தால், பழங்காலத்துச் சிலைகளை வாங்குவதற்கு விலைமதிக்க முடியாத பொருள்களை ஈடாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : சார், மற்றப் பொருட்களைத் திருடுவதற்கும் கோவில் சிலைகளைத் திருடுவதற்கும் வேறுபாடு உண்டு. சிலர் பொருளீட்டுவதற்காகத் திருடலாம்; சிலர் பக்தியினால் திருடலாம். ஆகவே, இந்தத் திருட்டுகள் என்ன காரணத்தினால் நடைபெறுகின்றன என்பதை மனோதத்துவ ரீதியிலே கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிலைகள் பொருளீட்டு வதற்காகவும் திருடப்படலாம்; பக்தியினாலும் திருடப்படலாம் என்று சொன்னார்கள். ஆகவே, திருட்டு நடைபெறுவதற்கான காரணம் அவர்களது கேள்வியிலேயே அடங்கி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(அ) 2—2—1973 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் பேருரையை நிகழ்த்துமுன் சில உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தது குறித்து.

MR. DEPUTY SPEAKER : Hon. Members are aware that on 2nd February 1973 when the Governor rose to address the hon. Members of both the Houses assembled together under Article 176 of the Constitution, hon. Members Thiruvalargal K. T. K. Thangamani, M. G. Ramachandran and A. R. Marimuthu, made certain statements and then accompanied by the Members of their parties staged a walk-out.

1973 பிப்ரவரி 5] [பேரவைத் துணைத் தலைவர்]

In this connection I wish to draw the attention of hon. Members to Rule 12 of the Tamil Nadu Legislative Assembly Rules which says that " When the Houses of the Legislature are assembled together under Article 175 or 176 or when the members of the Assembly alone have assembled, under Article 175 of the Constitution, no member shall obstruct or interrupt the Address either before or after the Address or during its duration with any speech or point of order or in any other manner; and such obstruction or interruption shall be regarded as a gross breach of order of the House and shall be dealt with by the Speaker as such at the next sitting of the Assembly."

I request hon. Members to note the words " next sitting of the Assembly ". The word ' sitting ' has been defined in the Rules as follows :—

" Sitting " means the meeting of the Members of the House for transaction of business on any day from its commencement till the House rises for the day.

Hon. Members are also aware that the next sitting of the House is only to-day, after the incident, as the House adjourned after passing the Condolence Resolution on the 3rd instant.

However, in view of the fact that to-day has been fixed for the discussion of the resolution for the removal of the Deputy Speaker from his office, the matter mentioned above will be taken up to-morrow.

(ஆ) பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

2—2—1973-ம் நாள் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் எடுத்த முடிவின்படி பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும்.